## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 350/2019 | Date : 02.08.2023 | PW2 |
|---|---|---|
| Name: வின்செண்ட் | S/o. ஜான் | |
| Evidence Recorded Time: 12.11 P.M. to 12.15 P.M | | |

**5-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வாதி ஈஸ்வரன் 5ம் பிரதிவாதிக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி தடம் வேண்டும் என்று கேட்டுள்ளார். வாதி இந்த வழக்கில் யார் யாரை தரப்பினராக சேர்த்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை, வழக்கறிஞர் சொன்னதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். வாதி என் நண்பர் என்றால் பக்கத்து நிலத்துக்காரர் என்பதால் நெருங்கிய நண்பர் ஆவார். வழக்கு சொத்து சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி தேவராஜ் யாருக்கு நிலத்தை விலை பேசினார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நிலத்தை விற்பனை செய்துவிட்டதாக கூறினார். வழக்குபற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் வாதி என் நண்பர் என்பதால், அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

ஓம்/-PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.